வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி-பழனி

தேதி 25.7.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

துடிப்பான கிராம திட்ட பங்கேற்பாளர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மாலை காணொளி காட்சி மூலம் கலந்துரையாட உள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு ருமேனியா நாட்டில் பொருளாதார ஆய்வு பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கவுரவித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவர் தனது ராஜினாமா கடிதத்தை பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் சமர்பித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் **மன் கி பாத்** என்னும் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாக உள்ளது.

மோடி

துடிப்பான கிராம திட்ட பங்கேற்பாளர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மாலை காணொளி காட்சி மூலம் கலந்துரையாட உள்ளார். நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் கலந்துரையாட உள்ளனர். லடாக், இமாச்சல பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் முழுவதும் உள்ள 74 துடிப்பான கிராமங்கள் நிகழ்ச்சியில் பங்கேற்கின்றன. வளர்ச்சி அடைந்த கிராம திட்டம் கடந்த மாதம் 4-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை 2-கட்டங்களாக ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் நாடு தழுவிய அளவில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்றனர். இதில் நாடு தழுவிய ஆன் லைன் வினாடி-வினா போட்டியில் பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக பங்கேற்பாளர்கள் உள்ளூர் சமூகங்களுடன் தூய்மை இயக்கங்கள். அரசு திட்டங்கள் குறித்தும்

விழிப்புணர்வு பிரச்சாரங்களை வழங்கினர். இளைஞர் சம்மேளனங்கள், கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சிகள், மரம் நடுதல், கிராம பஞ்சாயத்து உருவாக்குதல், உள்ளூர் கைவினைக் கலைஞர்களுடன் கலந்துரையாடல் மற்றும் முக்கியத் துவம் வாய்ந்த நிறுவனங்களை பார்வையிடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பிரதமரின் தொலைநோக்கு பார்வையை நனவாக்குவதற்காக வளர்ச்சி அடைந்த கிராம திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

*பிரதமர்*

நீட் தேர்வு வினாத் தாள் கசிவுக்கு எதிராக கடுமையான சட்டத்தைக் கொண்டு வர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும், நடப்பு நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடரில் இதற்கான புதிய மசோதா தாக்கல் செய்யப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தனது இன்ஸ்ட்டாகிராம் வீடியோவில் தெரிவித்திருந்தார். இந்த வீடியோவிற்கு இளைஞர்களிடம் இருந்து கிடைத்துள்ள நேர்மையான வரவேற்பிற்கும் ஆலோசனைக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள புதிய வீடியோவில் மக்களின் அன்பு தொடர்பு மேலும் வலுப்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் தேர்வுக்கால கருத்து குறித்து பிரதமர் மோடியின் இந்த இன்ஸ்ட்டாகிராம் வீடியோ 24 மணி நேரத்தில் 30 கோடிக்கும் அதிகமான பார்வையாளர்களைப் பெற்று புதிய உலக சாதனை படைத்துள்ளது.

*முர்மு*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு ருமேனியா நாட்டில் பொருளாதார ஆய்வு பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கவுரவித்துள்ளது. ரூமேனியா நாட்டிற்கு அவர் அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவருக்கு சிறப்பான பொது சேவை கல்வி மற்றும் சமூகம் உள்ளடக்கிய பங்கேற்பு, அர்ப்பணிப்பு, இந்தியா-ரூமேனியா நல்லுறவை மேம்படுத்துவதற்கான பங்களிப்பு ஆகியவற்றிற்காக இந்த விருது வழங்கப்பட்டது. இந்த கவுரவத்தை ஏற்றுக் கொண்ட அவர் இந்த விருது இந்தியாவின் 140 கோடி மக்களுக்கு உரியது என்று தெரிவித்துள்ளார். மேலும் இது இருநாட்டு மக்களுக்கு இடையே உள்ள நீடித்த உறவின் அடையாளம் என்றும் குறிப்பிட்டுள்ளார். ரூமேனியாவில் அருங்காட்சியகத்தை பார்வையிட்ட அவர் அங்கு மரக் கன்றுகளை நட்டார். தொடர்ந்து ரூமேனியாவில் நடைபெற்ற வர்த்தக கூட்டமைப்பு நிகழ்ச்சியில்

உரையாற்றிய அவர் இந்தியாவில் முதலீடு செய்ய முன் வருமாறு அந்நாட்டு தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

*தர்மேந்திர பிரதான்*

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவர் தனது ராஜினாமா கடித த்தை பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் சமர்பித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் கடந்த 10 நாட்களாக நடைபெற்று வரும் மாணவர் போராட்டங்களைத் தொடர்ந்து நிலவும் சூழ்நிலையால் தாம் மிகுந்த வேதனை அடைந்த தாகவும் இது தனது கவுரப் பிரச்சனை அல்ல என்றும் அவர் கூறி உள்ளார். புதுடெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரிலும் நாடு முழுவதிலும் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டும் தேச விரோத சக்திகள் அதை தவறாக பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கிலும் எந்த ஒரு மாணவரின் எதிர்காலமும் சட்ட சிக்கலில் சிக்காமல் இருப்பதை உறுதி செய்யும் நோக்கிலும் பிரதமரிடம் தமது ராஜினாவை அளிக்க முடிவு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் ராஜினாமா குறித்து கருத்து தெரிவித்த மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ திரு பிரதானின் 10-ஆண்டு கால பயணம், பொது வாழ்க்கை மற்றும் மாணவர் நலனுக்கான அவரது வாழ்நாள் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும் எனக் கூறினார். வலிமையான இந்தியாவை கட்டமைப்பதில் அவர் ஆற்றிய பங்களிப்பு ஆகியவற்றிற்காக அவர் நன்றி தெரிவித்தார்.

*ஆஷாதி-ஏகாதசி* (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி புனித ஆஷாதி ஏகாதசியை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில் இந்த புனிதமான நாள் பக்தி மற்றும் இரக்கத்தின் செய்தியைப் பற்றியது எனக் குறிப்பிட்டுள்ளார். பகவான் விட்டலின் ஆசிர்வாதம் அனைவருக்கும் மகிழ்ச்சி, நல்லிணக்கம் மற்றும் செழிப்பை கொண்டு வரட்டும் என்று தெரிவித்துள்ளார். ஒவ்வொரு குடிமகனின் நலன் மற்றும் கண்ணியத்திற்காக அயராது பணியாற்றுவதற்கும் உழைப்பதற்கும் பகவான் விட்டல் ஆசியை வழங்குவார் என பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

*ராஜ்நாத்*

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் புதுடெல்லியில் இருந்து லடாக்கின் டிராஸ் எல்லைப் பகுதிக்கு சென்றுள்ளார். அவரது 2

நாள் பயணத்தின் போது லடாக்கின் அருகில் உள்ள முக்கிய பகுதிகளை அவர் பார்வையிடுகிறார். நாளை கார்கில் போர் நினைவு தினம் என்பதால் கார்கில் போர் நினைவு சின்னத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்ச்சியில் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கார்கில் தினம் குறித்து மேலும் சில முக்கிய தகவல்கள்...........

(வாய்ஸ்)

1999-ஆம் ஆண்டு கார்கில் போரின் போது உயிர்தியாகம் செய்த துணிச்சலான வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. 27-ஆவது கார்கில் வெற்றி தினத்தை குறிக்கும் வகையில் 2-நாள் நினைவு நிகழ்ச்சிகள் லடாக்கில் இன்று தொடங்கின. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26-ஆம் தேதி கார்கில் வெற்றி தினம் கொண்டாடப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் ஆபரேஷன் விஜய் குறித்து நினைவு ஆவணப் படம், துணிச்சலான வீர்களுக்கு அஞ்சலி செலுத்துதல். தியாகிகளின் உறவினர்களுடன் கலந்துரையாடுதல், போரில் இடம் பெற்ற முன்னாள் ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடுதல் போன்ற
நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. கார்கில் போர் நினைவு சின்னத்தில் இன்று முக்கிய நிகழ்ச்சிகள் தொடங்கின. நாளை போர் நினைவு சின்னத்தில் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பங்கேற்க உள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்*

வினாத் தாள் கசிவு மற்றும் தேர்வு நடைமுறை முறைகேடுகளில் ஈடுபடுவோருக்கு அதிக பட்ச தண்டனையை உறுதி செய்யும் வகையில் விரைவு நீதிமன்றங்களை அமைக்கும் சட்ட வரைவு மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. புதுடெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் விளக்கினார்.

இதுகுறித்த மேலும் சில தகவல்கள்............

(வாய்ஸ்)

நாட்டில் வேதியியல் துறையை முற்றிலும் புதிய முறையில் மேம்படுத்துவதற்கான புதிய திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது. செமி கண்டக்டர் துறையைப் போலவே வேதியியல்

துறையும் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கியமான அடித்தள தொழில் துறையாக விளங்கி வருகிறது. இத்துறையை மேம்படுத்த வேண்டி இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பவ்யா ரசாயன திட்டத்திற்கு நாடு முழுவதும் 3 ரசாயன ஆலைகளை அமைக்க 3 ஆயிரத்து 30 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாக அவர் தெரிவித்தார். இதன்படி, அடுத்த 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு அதிகபட்சமாக ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்படும் என்று அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

வினாத் தாள் கசிவு மற்றும் தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான தண்டனை வழங்குவதை உறுதி செய்வதற்காக விரைவு நீதிமன்ற அமைப்பின் வரைவு மசோதா அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*மன் கி பாத்*

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் **மன் கி பாத்** என்னும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை ஒலிபரப்பாக உள்ளது. நாளை காலை அகில இந்திய வானொலியில் 11 மணிக்கு ஒலிபரப்பாகும் பிரதமரின் இந்நிகழ்ச்சி 136-ஆவது அத்தியாயம் ஆகும். இந்நிகழ்ச்சி அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்தி இணையதளம், மற்றும் நியூஸ் ஆன் ஏர் மொபைல் செயலி ஆகியவற்றில் ஒலிபரப்பப்படும் மேலும் பிரதமர் அலுவலகம் மற்றும் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யு-டியூப் சேனலிலும் நேரடியாக ஒலிபரப்பப்படும். இந்நிகழ்ச்சி முடிந்த உடன் பிரதமரின் தமிழாக்கம் ஒலிபரப்பாக உள்ளது.

*ஜெய்சங்கர்*

சர்வதேச அளவில் இணக்கமான சூழலை உருவாக்குவதில் இந்தியா முக்கிய பங்களிப்பு செய்து வருவதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சர்வதேச வர்த்தக கூட்டத்தின் 60-ஆவது ஆண்டு நிறைவு கூட்டத்தில் உரையாற்றிய அவர் வெளிப்படையான மற்றும் சர்வதேச அளவில் இணக்கமான சட்ட சூழலை உருவாக்குவதில் இந்தியாவின் அர்ப்பணிப்பை சுட்டிக் காட்டினார்.

ஜண்டு குமார்

காமன் வெல்த் விளையாட்டு போட்டியில் மாற்றுத்திறனாளிகளுக்கான பளுதூக்கும் போட்டியில் இந்தியாவின் ஜண்டு குமார் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். ஸ்காட்லாந்தில் நடைபெறும் காமன்வெல்த் போட்டி கடந்த 23-ஆம் தேதி தொடங்கியது. இந்த போட்டியில் இந்தியாவின் ஜண்டுகுமார் வென்றுள்ளார். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் வெண்கலம் வென்ற ஜண்டுகுமாருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். ஜண்டுகுமாரின் செயல் திறன் பாராட்டத் தக்கது எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த அளவற்ற வலிமை, தளராத உறுதி, மற்றும் பல ஆண்டுகால ஒழுக்கத்தின் முயற்சி, என குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு சவாலையும் கடந்து சர்வதேச அளவில் அவர் சிறந்து விளங்கியதன் மூலம் ஜண்டுகுமார் ஒட்டுமொத்த தேசத்தின் பெருமையை அடைந்துள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். அவர் எண்ணற்ற இந்தியருக்கு உத்வேகம் அளித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

வீட்டு வரி

புதுச்சேரி உழவர்கரை நகராட்சி மக்களின் நலன் கருதி நாளை லாஸ்பேட் விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் வீட்டுவரி வசூல் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை வீட்டுவரி சொத்துவரி மற்றும் சேவை வரி போன்றவை செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினை பயன்படுத்தி பெத்துசெட்டி பேட்டை, சாந்தி நகர், லாஸ்பேட்டை, கருவடிக்குப்பம், சாமிபிள்ளைத் தோட்டம், மற்றும் இதர வார்டுகளில் உள்ள நிலுவை தாரர்கள் 2026-27-ஆம் ஆண்டிற்கான வரியை செலுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

துடிப்பான கிராம திட்ட பங்கேற்பாளர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மாலை காணொளி காட்சி மூலம் கலந்துரையாட உள்ளார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு ருமேனியா நாட்டில் பொருளாதார ஆய்வு பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி கவுரவித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று தனது பதவியை ராஜினாமா செய்தார். அவர் தனது ராஜினாமா கடிதத்தை பிரதமர் திரு நரேந்திர மோடியிடம் சமர்பித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் **மன் கி பாத்** என்னும் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாக உள்ளது.

**--------------------------**